KANTON AARGAU

# தொடக்கப்பள்ளி( Volksschule) ஆர்காவ் கேன்டனில்



## பெற்றோருக்கான தகவல்கள் (tamilisch)

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

**வழங்குபவர்**

Departement
Bildung, Kultur und Sport
Abteilung Volksschule
Bachstrasse 15
5001 Aarau

Tel. 062 835 21 00

E-Mail: volksschule@ag.ch
www.ag.ch/volksschule

**புகைப்படங்கள்**

Adobe Stock
Kanton Aargau

**Copyright**

© 2022 Kanton Aargau

# மதிப்பிடப்பட்ட பெற்றோர்

இந்த சிற்றேட்டில் நீங்கள் ஆர்காவ் பொதுப்பள்ளி அமைப்பு பற்றிய தகவல்களைப் பெறுவீர்கள். ஆர்காவ் பள்ளிகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்திற்குப்பின், அதன் முக்கியக் கூறுகள் விவரிக்கப்படும். தொடக்கப்பள்ளி (Volkschule) பற்றிய பொதுத்தகவல்கள், பல்வேறு பள்ளி மட்டங்கள் மற்றும் வகைகள், மேற்படி தொடக்கப்பள்ளி (Volkschule) நிதி நிலைகள், குறிப்புகள் மற்றும் சலுகைகள் பற்றி பேசப்படும்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பள்ளி வெற்றிக்கு முக்கியக் காரணம், பள்ளி மற்றும் பெற்றோருக்கு இடையிலான ஒருங்கிணைந்த வேலைப்பாடாகும். இந்த ஒருங்கிணைந்த வேலைப்பாட்டிற்கு ஒரு தனி அத்யாயம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவின் முடிவிலும், அந்த தலைப்பு பற்றிய மேற்படி குறிப்புகளுக்கான இணையதள இணைப்பு (internet link) கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் மேலும் தகவல்களை பெற்றோருக்கான தகவல் கூட்டத்திலும் பெறலாம். உங்கள் பிள்ளை ஒரு  சிறார் பள்ளி (Kindergarten) / பள்ளியில் நியமிக்கப்பட்ட உடன், உங்கள் தனிப்பட்ட கேள்விகளுக்காக ஆசிரியர்களும் பள்ளி முதல்வரும் தயாராக இருப்பர்.

ஆர்காவ் கேன்டனில் உங்கள் பிள்ளையின் வெற்றிகரமான பள்ளி காலத்திற்கு நாங்கள் வாழ்த்துகிறோம்!

கல்வி கலாச்சாரம் மற்றும் விளையாட்டுத் துறை, தொடக்கப்பள்ளி பிரிவு (Departement Bildung, Kultur und Sport
Abteilung Volksschule)

ஆர்காவ், கோடைக்காலம் 2021

# ஆர்காவ் பள்ளிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

ஆர்காவ் கேன்டனில் கட்டாயக் கல்விக் காலம் 11 வருடம் நீட்டிக்கும்.

முதல் எட்டு ஆண்டு பள்ளிக் காலம் **இரண்டு ஆண்டுகள் சிறார் பள்ளி (Kindergarten)** மற்றும் **ஆறு ஆண்டுகள் ஆரம்பப்பள்ளி (Primarschule)** என பிரிக்கப்படுகிறது. பின்பு **மூன்று வருடஉயர்நிலைப் பள்ளி (Oberstufe)** (செகுண்டார் ஷ்டூபே I (Sekundarstufe I)) இணைகிறது. உயர் நிலைப்பள்ளி மேலும் மூன்றகப் பிரிக்கப்டுகிறது ரியால் பள்ளி (Realschule), செகுண்டார் பள்ளி (Sekundarschule) மற்றும் பெசீர்க் பள்ளி (Bezirksschule). தவிர, சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்காக மேலும் சிறப்பு வகை பள்ளிகள் உள்ளன.

கட்டாயப் பள்ளி காலத்திற்குப் பின், இளைஞர்கள் ஒரு **தொழில்** கற்றுக்கொள்கிறார்கள் அல்லது ஒரு **நடுநிலைப்பள்ளி (Mittelschule)** (செகுண்டார் ஷ்டூபே II (Sekundarstufe II)) செல்கிறார்கள்.

மேலதிகத் தகவல்கள்: www.ag.ch/bks




Primarschule: EK: Einschulungsklasse
Spezielle Abschlussklassen: WJ: Werkjahr – BWJ: Berufswahljahr – IBK: Integrations- und Berufsfindungsklasse
Berufsbildungsbereich: EBA: Eidgenössischer Berufsattest – EFZ: Eidgenössisches Fähigkeitszeugnis –
BM I: Berufsmaturität

# தொடக்கப்பள்ளி (Volksschule) – அனைவருக்குமான பள்ளி

**ஆர்காவ் கேன்டனில் வாழும் எல்லா குழந்தைகளுக்கும், பதினோரு வருடம் பள்ளியில் படிக்கும் உரிமையும் கடமையும் உள்ளது . ஒவ்வொரு குழந்தைக்கும், தங்கள் திறனுக்கு ஏற்ப கல்வியைப் பெறும் உரிமை உள்ளது. அது தான் வசிக்கும் இடத்திற்கு ஏற்ப, தன் திறமைக்குத் தகுந்தவாறு உள்ள எந்தப் பள்ளியின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறதோ, அந்தப்பள்ளிக்குச் செல்கிறது.**

பொதுப்பள்ளிப் படிப்பு இலவசம். 4 வயது முடிந்த உடன் கட்டாயக் கல்வியில் அனுமதி ஆரம்பிக்கிறது. ஆகஸ்டு மாதம் இரண்டாம் திங்கட் கிழமை மாணவ மாணவிகளுக்கு பள்ளி வருடம் ஆரம்பிக்கிறது.

ஆசிரியர்களும் பாட வல்லுநர்களும், குழந்தைகளையும் இளைஞர்களையும் அவர்கள் திறமைக்கு ஏற்றார் போல் முன்னேற்ற கடமைப்பட்டுள்ளார்கள். இளைஞர்கள் கட்டாயக் கல்வி காலத்தின் முடிவில், மேல் கல்வி மற்றும் வாழ்க்கை பாதைக்கு வேண்டிய அறிவு மற்றும் திறமை இவற்றை பெறுவதே குறிக்கோளாகும்.

## சிறப்பு ஆதரவுச் சலுகைகள் மற்றும் சிறப்புக் கல்வி

சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு(உதாரணமாக சிறப்புத் திறமை உள்ளவர்கள், கற்றல் குறைபாடு உள்ளவர்கள், நடத்தை குறைபாடு உள்ளவர்கள்) பாடம் சிறப்பு சிறப்பு ஆதரவுச் சலுகைகள் மூலம் வழங்கப்படலாம். சிறப்பு ஆதரவு வழக்கமான வகுப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படும் அல்லது சிறப்பு வகுப்புகளாக நடைபெறும்.

உடல் ஊனமுற்ற அல்லது குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், அவர்களது தேவையின் அடிப்படையில் ஆதரிக்கப்படுவார்கள் (இதர கல்வி சலுகைகள்). இந்த ஆதரவு வழக்கமான அல்லது சிறிய வகுப்புகள் (Kleinklassen)களில் நடைபெறும்; முக்கிய நிபந்தனையின் கீழ் சிறப்புப் பள்ளிகளிலும் நடைபெறும்.

தொடக்கப்பள்ளி பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/volksschule
சிறப்புக்கல்வி மற்றும் சிறப்பு ஆதரவுச் சலுகைகள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:
www.ag.ch/volksschule > Sonderpädagogik & Förderangebote

## இடை கலாச்சாரம்

த◌ொடக்கப்பள்ளி (Volksschule), வேறுபட்ட சமூக, மொழி மற்றும் கலாச்சாரத் தோற்றம் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் ஒற்றுமையில் முக்கிய பங்கு அளிக்கிறது. கால் பங்கிற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஜெர்மன் தவிர பிற மொழிகளைப் பேசுகிறார்கள். புதிதாகக் குடிபெயர்ந்தவர்களுக்கு ஜெர்மன் மொழியில் சிறப்பு ஆதரவும் சிறப்புச் சலுகைகளும் தர வண்டிய நிபந்தனை உருவாகிறது. இதனால் பள்ளி ஒற்றுமை வெற்றி பெறவும் மொழி தொடர்பான பின்தங்கல்கள் சரிசெய்யப்படவும் முடியும்.

முதல் மொழியில் முன்னேற்றம் பெற **சொந்த மொழி மற்றும் கலாச்சாரம் (heimatliche Sprache und Kultur)** (HSK). வகுப்புகலை வழங்குகிறது.
இந்த வகுப்புகள் வெளிநாட்டுத் தூதரகம், அயல் நாட்டுப் பிரதிநிதி அல்லது பெற்றோர் குழுமம் போன்ற சங்கங்களால் வழங்கப்படுகிறது.

## மதிப்பீடுகள், அறிக்கைகள் மற்றும் இடமாற்றங்கள்

ச◌ிறார் பள்ளி (Kindergarten)-யில் வளர்ச்சி நிலை மதிப்பீட்டுத் தாள் மூலம் பதிவு செய்யப்படுகிறது. 1ஆம் வகுப்பு முதல் ஆரம்பப்பள்ளி (Primarschule) மாணவ மாணவிகளின் மதிப்பீடு முதல் செமஸ்டர் இறுதியில் இடைக்கால அறிக்கையுடனும், பள்ளி வருட இறுதியில் கற்றல் அறிக்கை (ஆரம்பப்பள்ளியின் 1. ஆம் வகுப்பு) முக்கியமாக மதிப்பெண்களுடன் கூடிய வருடச் சான்றிதழ் உடனும் (ஆரம்பப்பள்ளி 2. ஆம் வகுப்பு முதல்) செய்யப்படுகிறது . செயல்திறன் ஆதாரங்களுடன் கூடிய மதிப்பீட்டு ஆவணம் இந்த மதிப்பீட்டிற்கு அடிப்படையாக அமைகிறது. அடுத்த வகுப்புக்கான தேர்ச்சி (தேர்ச்சி) வருடச் சான்றிதழில் உள்ள மதிப்பெண்களைப் பொருத்தது. ரியால் (Real)-, செகுண்டார் (Sekundar)- oder பெசீர்க் பள்ளி (Bezirksschule) இடமாற்றம் வகுப்பு ஆசிரியர் பரிந்துரையின் அடிப்படையில் நடைபெறும். இது 6. ஆம் வகுப்பு இடைநிலை அறிக்கையை , முக்கியமாக மதிப்பீட்டு ஆவணத்தைப்பொருத்தது.

இடைக்கலாச்சாரம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு:
www.ag.ch/volksschule > Unterricht & Schulbetrieb > Schule & Interkulturelles
மதிப்பீடு / இடமாற்றம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு பதினொன்று மொழிகளில் குறிப்பிதழ்கள்:
www.ag.ch/leistungsbeurteilung-volksschule

# பொதுவான தகவல்கள்

## பள்ளி விடுப்பு மற்றும் விடுமுறை நாட்கள்

பள்ளி விடுப்பு மற்றும் விடுமுறை நாட்கள் பற்றிய தகவல்கள் ஊருக்கு ஊர் மாறுபடக் கூடும். விடுமுறை தேதிகள் பள்ளி இணையதளத்தில் காட்டப்பட்டுள்ளது.

## பள்ளிக்கு வராமை

உங்கள் குழந்தை வகுப்புகளிலிருந்து விலகி இருப்பதை உடனடியாக ஆசிரியருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் வராமைக்கான காரணத்தை அளிக்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் கோரப்படுகிறார்கள். உடல்நலமின்மை, விபத்து மற்றும் முன் கணிக்க முடியாத காரணங்கள் (உதாரணமாக குடும்பத்தில் மரணம்) மன்னிப்புக்குக்கு உரியவை ஆகும். மன்னிக்கப்படாத வராமை உயர்நிலைப் பள்ளி(பெசீர்க், செகுண்டார் மற்றும் ரியால் பள்ளி) (Oberstufe (Bezirks-, Sekundar- und Realschule)) இடைக்கால அறிக்கையிலும், வருடச் சான்றிதழிலும் பதிவு செய்யப்படும்.

## விடுமுறை

முன்கூட்டியே கணிக்க கூடிய விடுமுறைகளுக்கு, பெற்றோர்கள் முன்னதாகவே பள்ளியில் எழுத்து மூலம் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விடுமுறைக்கு அனுமதிக்கப்படக்கூடிய காரணங்கள்: முக்கிய விளையாட்டு நிகழ்வுகள், முக்கிய சமய விழாக்கள், சோதனை தொழிற்பயிற்சி அல்லது இதைப் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்பு.

## பள்ளி மருத்துவச் சேவை மற்றும் பள்ளி வழியாக பற்கள் பராமரிப்பு

மாணவர்கள் சுகாதார மேம்பாடு மற்றும் தடுப்பு இவற்றில் ஆர்காவ் கேன்டன் மருத்துவர்கள் ஆதரவு தருகிறார்கள். மருத்துவ பராமரிப்பச் சோதனை சிறார் பள்ளியிலும் மற்றும் இளமைப் பருவத்திலும் சுகாதாரப் பராமரிப்பை அளிக்கிறது. இவை பொதுவாக உங்கள் குழந்தை அல்லது குடும்ப மருத்துவருடன் நடைபெறும்.

வருடாந்திர பல் சோதனைக்கு மாணவர்கள் பல் சோதனை பாஸ்(ரசீதுக் கையேடு) பெறுவார்கள். அதுமட்டுமின்றி, 1. ஆம் வகுப்பிலிருந்து பல் பராமரிப்பிற்காக நிபுணர்கள் பார்வையிடுவர். சிறார் பள்ளி (Kindergarten ) யிலிருந்து ஆரம்பப் பள்ளி (Primarschule) 6.ஆம் வகுப்பு வரை. குழந்தைகள் பற்களை எவ்வாறு சரியாக சுத்தப்படுத்தப்பட வேண்டுமென்றும், அவற்றை எவ்வாறு சுகாதாரமாகப் பராமரிக்க வேண்டுமென்றும் கற்றுக்கொள்கிறார்கள்.

ஆர்காவ் கல்வி மற்றும் பள்ளி பற்றிய மேலதிகத் தகவல்கள் பதினோரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: www.hallo-aargau.ch

## பள்ளி அதிகாரிகள்

ஆர்காவ் கேன்டன் பள்ளி மற்றும் கல்வி முறைக்கு  கல்வி, கலாச்சாரம் மற்றும் விளையாட்டுத் துறை (Departement Bildung, Kultur und Sport) பொறுப்பானதாகும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் பள்ளி நிர்வாகத்திற்கு  நகராட்சி மன்றம் (Gemeinderat) மற்றும் பள்ளி முதல்வர் பொறுப்பானவராவர்.

## ஆதரவு மற்றும் ஆலோசனை

தொடக்கப்பள்ளி (Volksschule) மாணவ மாணவியர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் பல்வேறு ஆதரவு மற்றும் ஆலோசனைச் சலுகைகள் இலவசமாக இருக்கிறது :

**பள்ளி மனோதத்துவச் சேவை (Schulpsychologischer Dienst)**
பள்ளி மனோதத்துவச் சேவை என்பது சிறார் பள்ளி முதல் தொடக்கப்பள்ளி இறுதி வரை உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஒரு சிறப்புத் துறை. சிறார் பள்ளி மற்றும் பள்ளியில் வெளிப்படும் கல்வி மற்றும் செயல் திறன் சிறப்புத்தன்மை, உளவியல் மற்றும் சமூகச் சிக்கல்கள் போன்றவை பதிவுக்கான காரணங்களாகும்.

**பள்ளி மேற்பார்வை (Schulaufsicht)**
பெற்றோர்கள் பள்ளி தொடர்பான கவலைகளைப் பள்ளி மேற்பார்வையிடம் தெரிவிக்கலாம். இது பெற்றோர்களின் கவலைகளைக் கேட்டு, அவர்களுக்கு நடைமுறை ஆலோசனையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் உதவும். அவ்வாறு செய்வதன் மூலம், முதலில் பெற்றோருக்கும் பள்ளிக்கும் இடையில் நேரடி உரையாடல் நடத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்படுகிறது(ஒப்பீடு "Schule und Eltern" > "Zuständigkeiten").

**பள்ளி சமூகப் பணி (Schulsozialarbeit)**
பல பள்ளிகளில், பள்ளி சமூகப் பணி இருக்கிறது. இது எல்லா நிலையிலுள்ள மாணவ மாணவியர்கள்,பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முழுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. பள்ளி சமூகப் பணி குழந்தைகளையும் இளைஞர்களையும் வளர்ந்தவர்களாக மாற்றும் செயல்பாட்டில் உடனிருக்கிறது.

**தொழில் ஆலோசனை**
தொழில் பயிற்சி மற்றும் தொழிலுக்கான ஆலோசனை சேவை மையங்கள் (ask!) தொழில் நுழைவு, தொழில் நடைமுறை மற்றும் மேல் படிப்பு பற்றிய அனைத்து கேள்விகளுக்கும் ஆலோசனை வழங்குகிறது.

ஆர்காவ் பள்ளி மற்றும் கல்வி பற்றிய மேலதிகத் தகவல்கள் பதினோரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: www.hallo-aargau.ch
ஆதரவு மற்றும் ஆலோசனை பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/volksschule > Unterstützung & Beratung

# பள்ளி மற்றும் பெற்றோர்கள்

**க◌ுழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பள்ளிவெற்றிக்குப் பெற்றோர் மற்றும் பள்ளிக்கு இடையிலான ஒத்துழைப்பு ஒரு முக்கிய அம்சமாகும்.**

## பொறுப்பு

ப◌ெற்றோர்கள் பள்ளி தொடர்பான கேள்விகள் மற்றும் தகவல்களுக்கு, தங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது பள்ளி முதல்வர் ஐ அணுகலாம்.

## ஒருங்கிணைந்த பணி

**வழக்கமான பள்ளித் தகவல்கள்**
பள்ளி நிகழ்வுகள் மற்றும் பிள்ளைகளின் செயல் திறன் பற்றிய தகவல்களைப் பெற்றோருக்கு தவறாமல் வழங்க பள்ளி கடமைப்பட்டுள்ளது. இதற்காகத்தான் பெற்றோருடன் பேச்சுவர்த்தை, பெற்றோர்கள் மாலை மற்றும் தகவல் விளக்கக்காட்சி போன்றவை நடைபெறுகின்றன.

**பெற்றோரின் கடமைகளும் உரிமைகளும்**

தங்கள் பிள்ளைகள் தவறாமலும் சரியான நேரத்தில் பள்ளிக்கு வருவதற்கும், ஓய்வுடன் காட்சியளிப்பதற்கும் பெற்றோர்களே பொறுப்பு. பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளின் வகுப்புக்கு வரும் உரிமை உள்ளது. நகராட்சி மன்றம் (Gemeinderat) அல்லது பள்ளி (பள்ளி முதல்வர், ஆசிரியர்) யிடமிருந்து பள்ளி நிகழ்வுகளுக்கான அழைப்புகள் வந்தால், அதில் பங்கேற்க பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

முக்கியமான முடிவுகளுக்கு முன், விசாரணைக்கும் மற்றும் கோப்புகளைப் பார்வையிடவும் பெற்றோருக்கு உரிமை உள்ளது. தீர்மானமான முடிவுகள்,பெற்றோருக்கு நகராட்சி மன்றம் (Gemeinderat) அல்லது பள்ளி முதல்வர் -ஆல் எழுத்துப்பூர்வமாக நியாயப்படுத்தலுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். பெற்றோருக்கு இந்த முடிவில் உடன்பாடு இல்லையென்றால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெசீர்க் பள்ளி வாரியம் (Bezirksschulrat) இடம் மேல்முறையீடு அளிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. விசாரணை மற்றும் மேல்முறையீட்டு உரிமை உள்ள முக்கிய முடிவுக்கான உதாரணங்கள்:

- ஆரம்பப் பள்ளி (Primarschule) 1. ஆம் வகுப்பில் நுழைவு
- பயிற்சி வகுப்பு (Einschulungsklasse) அல்லது சிறு வகுப்பு (Kleinklasse) இல் அபிவிருத்திக் கல்வி நடவடிக்கைக்கான ஒதுக்கீடு
- உயர் பள்ளி (Oberstufe) இல் நுழைவு
- தேர்ச்சி, உயர் பள்ளி (Oberstufe)க்குள் பள்ளி வகை மாற்றம்
- சிறப்புப் பள்ளிக்கான ஒதுக்கீடு

பள்ளி மற்றும் பெற்றோர்கள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/volksschule> Schule & Eltern
பெசீர்க் பள்ளி வாரியம் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:
www.ag.ch/bks > Über uns > Organisation > Vertretungen & Kommissionen > Bildung > Schulräte der Bezirke

# சிறார் பள்ளி(Kindergarten)

**சிறார் பள்ளி இரண்டு வருடங்கள் நடைபெறும். 31 ஜூலை வரை நான்கு வயது ஆன அனைத்துப் பிள்ளைகளும், அடுத்த பள்ளி ஆண்டு ஆரம்பத்தில் சிறார் பள்ளிக்குள் நுழைவர்.**

சிறார் பள்ளியில் படிப்பது குழந்தைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் உதவுகிறது. சிறார் பள்ளியில் பிள்ளைகளுக்கு, புதிய சூழலில் அவர்களது ஆர்வங்களையும் திறமைகளையும் வளர்த்துக்கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. கற்றல் விளையாட்டுத்தனமான முறையில் நடைபெறும். இது மொழி, கணித, இயக்க, சமூக மற்றும் உணர்வுத் திறன்களை விரிவாக்கம் செய்கிறது

படித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடல் இவற்றில் ஆர்வமுள்ள பிள்ளைகள் உதவப்படுவார்கள். ஆனால் படித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடல் இவற்றில் முறையான கற்பித்தல் எதுவும் நடைபெறாது. சிறப்புத் திறன்கள் இருப்பின், பிள்ளை முன்னதாகவேஆரம்பப் பள்ளி (Primarschule) இல் நுழைய முடியும்.

சிறார் பள்ளியில் வகுப்பு மொழி அடிப்படையாகவே பேச்சுவழக்கு தான். வீட்டில் ஜெர்மன் மொழி பேசாத பிள்ளைகள், சிறார் பள்ளியில் ஜெர்மன் கற்க உதவப்படுவார்கள்

சிறார் பள்ளி பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/schulstufen > Kindergarten
கற்பிக்கும் முறை பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/lehrplan

# ஆரம்பப் பள்ளி (Primarschule)

**ஆரம்பப் பள்ளி 1. முதல் 6. ஆம் வகுப்பு வரை இருக்கும். ஆரம்பப் பள்ளி முதல், வகுப்பு மொழி ஜெர்மன் ஆகும்.**

முதல் சில பள்ளி வருடங்களில் படித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடல் போன்ற திறன்கள் பெறப்படும். இயற்கை அறிவியல், சமூகம், வரலாறு, கலாச்சாரம் மற்றும் பொருளாதாரம் பற்றிய தலைப்புகள் கற்பிக்கப்படும். சங்கீதம், வடிவமைத்தல், உடற் பயிற்சி மற்றும் விளையாட்டு போன்றவையும் வகுப்பில் முக்கிய இடம் பெறுகிறது.

ஆரம்பப் பள்ளியின் முக்கிய நோக்கம் தன்னிச்சையான செயல்பாடு, சுய பொறுப்பு மற்றும் சமூகக் கல்வி ஆகியவற்றை ஊக்குவிப்பது தான். கற்பித்தலில் மாணவ மாணவிகளின் பல்வேறுபட்ட கற்றல் திறன்கள் மற்றும் தேவைகள் கருத்தில் கொள்ளப்படும். வகுப்பில் கற்றல் பிள்ளையின் ஒன்று சேர்ந்து பணி புரியும் உணர்வை ஊக்குவிப்பதுடன் ஆளுமையைப் பலப்படுத்துகிறது.

ஆரம்பப் பள்ளி பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/schulstufen > Primarschule
கற்பித்தல் முறை பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/lehrplan

# உயர் பள்ளி (Oberstufe)

**உயர் பள்ளி(செகுண்டார் ஷ்டுபே I (Sekundarstufe I))மூன்று வகைப் பள்ளிகளைக் கொண்டது ரியால் பள்ளி (Realschule), செகுண்டார் பள்ளி (Sekundarschule) மற்றும் பெசீர்க் பள்ளி (Bezirksschule). அவை மாணவ மாணவியர்களின் பல்வேறு செயல் திறன் தேவைகளின் அடிப்படையில் வேறுபடுகிறது. மூன்று பள்ளி வகைகளும் மூன்று வருடங்களைக் கொண்டது.**

## ரியால் பள்ளி (Realschule)

ரியால் பள்ளி அடிப்படை செயல் திறன் தேவைகள் கொண்ட உயர் பள்ளி வகை ஆகும். ரியால் பள்ளியில் மாணவ மாணவியர்கள் பரந்த பொதுக்கல்வி மற்றும் அடிப்படை தொழில் பயிற்சி பெறுகிறார்கள். ரியால் பள்ளிக்குப் பின் அதிகப்படியான இளைஞர்கள் கைவினை, தொழில் அல்லது சுகாதாரம் மற்றும் சமூகம் போன்ற பகுதிகளில் ஒரு வேலையைக் கற்றுக் கொள்கிறார்கள். தொழில் பயிற்சியில் நல்ல தரம் பெற்றால், அந்த இளைஞர்களுக்கு தொழிற்பள்ளி பல மேல் படிப்பு சலுகைகளையும் மற்றம் தொழில் முறை உலகில் முன்னேற்ற வாய்ப்புகளையும்  அளிக்கிறது.

## செகுண்டார் பள்ளி (Sekundarschule)

செகுண்டார் பள்ளி மேம்பட்ட செயல் திறன் தேவைகள் கொண்ட உயர் பள்ளி வகை ஆகும். செகுண்டார் பள்ளியில் மாணவ மாணவியர்கள் பரந்த பொதுக்கல்வி மற்றும் சவாலான தொழில் பயிற்சியும் பெறுகிறார்கள். செகுண்டார் பள்ளிக்குப் பின் சில மாணவ மாணவியர்கள் தொழில்நுட்ப நடுநிலைப்பள்ளி (Fachmittelschule),  பொருளாதார நடுநிலைப்பள்ளி (Wirtschaftsmittelschule) அல்லது கணினி அறிவியல் நடுநிலைப்பள்ளி (Informatikmittelschule) க்குச் செல்கிறார்கள்.

## பெசீர்க் பள்ளி (Bezirksschule )

பெசீர்க் பள்ளி  அதிகபட்ச செயல் திறன் தேவைகள் கொண்ட உயர் பள்ளி வகை ஆகும் பெசீர்க் பள்ளி சவாலான தொழில் பயிற்சிக்கும் மற்றும் நடுநிலைப்பள்ளி (Mittelschule) (கிம்னாசியம் (Gymnasium) / தொழில்நுட்ப நடுநிலைப்பள்ளி (Fachmittelschule) / பொருளாதார நடுநிலைப்பள்ளி (Wirtschaftsmittelschule) / கணினி அறிவியல் நடுநிலைப்பள்ளி

(Informatikmittelschule)) க்கும் தயார்படுத்துகிறது. பெசீர்க் பள்ளிக்குப் பின் பாதி இளைஞர்கள் கைவினை, தொழில் அல்லது சேவை போன்ற பகுதிகளில் தொழிற்பயிற்சியில் நுழைகிறார்கள். பிறர் நடுநிலைப்பள்ளியில் படிக்கிறார்கள்.

## கடைசி வருட சிறப்பு வகுப்புகள்

கடைசி பள்ளி ஆண்டில் சில இடங்களில் குறிப்பாக சில மண்டலங்களில் மட்டுமே கடைசி வருட சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகிறது. இந்த வகுப்பில், இளைஞர்கள் தொழில் உலகில் காலடி எடுத்து வைக்கும் அளவிற்கு உதவி வழங்கப்படுகிறது. பின்வருவன:

- தொழில் தேர்வு ஆண்டு (Berufswahljahr)
- வேலை ஆண்டு (Werkjahr)
- ஒருங்கிணைப்பு மற்றும் வேலை தேடும் ஆண்டு (Integrations- und Berufsfindungsklasse)

உயர் பள்ளி பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/schulstufen > Oberstufe
கற்பிக்கும் முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு: www.ag.ch/lehrplan

# தொடக்கப்பள்ளி (Volksschule)க்குப் பின்

**கட்டாயக் கல்வி காலத்திற்குப் பின் அதிகபட்ச இளைஞர்கள் தொழிற்கல்வி அல்லது உயர்நிலைப் பள்ளிக்குச் செல்கிறார்கள்.**

## தொழிற்கல்வி (Berufsbildung)

**த◌ொழில் அடிப்படைக் கல்வி (berufliche Grundbildung)** சுவிட்சர்லாந்தில் குறிப்பிடத்தக்க ஆரம்பப் பயிற்சி ஆகும். இந்தக் கல்வி இளைஞர்களுக்கு, தொழில் உலகில் ஆரம்பத்தைத் தருவதுடன் திடமான தொழில் அடித்தளத்தைத் தருகிறது. ஒரு நிறுவனத்தில் செயல் முறைக் கல்வியுடன், இடையிலேயே தொழில் கற்போர், வாரத்திற்கு ஒன்று முதல்  இரண்டு நாட்கள் தொழிற்கல்விப் பள்ளி (Berufsfachschule) க்குச் செல்கிறார்கள். எந்தப் பயிற்சி என்பதைப் பொருத்து பயிற்சி இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் ஆகும்: மூன்று அல்லது நான்கு ஆண்டு தொழில் அடிப்படைக் கல்வி, கூட்டாட்சி தேர்ச்சி சான்றிதழ் (eidgenössischen Fähigkeitszeugnis EFZ)க்கும், இரண்டு ஆண்டு தொழில் அடிப்படைக் கல்வி சுவிஸ் தொழில்முறை சான்றளிப்பு (eidgenössischen Berufsattest EBA)க்கும் வழிவகுக்கிறது.

ஒரு முழுமையான பயிற்சி, பிற்காலத்தில் தொழில் சந்தையில் தங்களை நிரூபிக்க ஒரு முக்கிய முன் நிபந்தனையாக இருக்கும். இது பல தொழில் முன்னோக்குகளை வெளிப்படுத்துவதுடன் மேல்படிப்பு வாய்ப்புகளையும் அளிக்கிறது.

தொழிற்கல்வி முடித்த திறமையான மற்றும் உந்துதல் கொண்ட இளைஞர்கள் கட்டாயப் பாடங்களுடன்  தொழிற்பயிற்சிப் பள்ளியில் கூடுதல் வகுப்புகளிலும் பங்கு பெறலாம். அவர்கள் பயிற்சியை **தொழில் புலமை (Berufsmaturität)** உடன் முடிக்கலாம். இது பயன்பாட்டியல் அறிவியல் பல்கலைக்கழகத்தில் (Fachhochschule) படிப்பதற்கான வாய்ப்பைத் தருகிறது.

## நடுநிலைப்பள்ளி (Mittelschulen)

நடுநிலைப்பள்ளி பதினோரு ஆண்டுகள் கட்டாயப் படிப்பிற்கு பின் வரும் மேல்நிலைப்பள்ளி ஆகும். பள்ளியின் வகையைப் பொருத்து  அது வெவ்வேறு முதிர்ச்சி நிலைக்கு வழிவகுப்பதுடன் உயர் தொழில்நுட்ப பள்ளி (höhere Fachschulen), பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம்

(Fachhochschulen ) அல்லது பல்கலைக்கழங்கள் (Universitäten) -இல் சேருவதற்கு வாய்ப்பளிக்கிறது.

ஆர்காவ் கேன்டனில் பின்வரும் நடுநிலைப்பள்ளிகளில் படிக்க முடியும்:

- கிம்னாசியம் (Gymnasium)
- தொழில் நடுநிலைப் பள்ளி (Fachmittelschule)
- பொருளாதார நடுநிலைப் பள்ளி (Wirtschaftsmittelschule)
- கணினி அறிவியல் நடுநிலைப் பள்ளி (Informatikmittelschule)

தொழிற்கல்வி பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/berufsbildung > Lehre
நடுநிலைப் பள்ளி மற்றும் அதில் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு: www.ag.ch/mittelschulen

**கல்வி, கலாச்சாரம் மற்றும் விளையாட்டுத்துறை**
தொடக்கப்பள்ளி துறை
பாஹ் தெரு 15
5001 ஆராவ்

ஜனவரி 2022